**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

D.W.–1

O.S.No.36/2018

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. அசோக்குமார் | வயது: 66 |
| த/பெ. : திரு. ராதாகிருஷ்ணன் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

பிரதிவாதியும், பொது அதிகார முகவர் ஆஜர். வாதி, பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதியின் பொது அதிகார முகவர். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 11.12.1963 – ஐம்புலிங்கம் பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | **பி.வா.சா.ஆ 1** |
| 18.05.2009 – கீதா ஏற்படுத்திய பாகபாத்திய விடுதலை பத்திரம் | சான்றிட்ட நகல் | **பி.வா.சா.ஆ 2** |
| 12.10.2015 – கீதா ஏற்படுத்திய பிழை திருத்தல் பத்திரம் | சான்றிட்ட நகல் | **பி.வா.சா.ஆ 3** |
| 16.9.2017– சுனில்குமார், சந்திப்குமார், ரஜேஸ்குமார் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் (அசல் ஆவணம் என்னிடம் உள்ளது என்று சாட்சி கூறுகிறார்) | சான்றிட்ட நகல் | **பி.வா.சா.ஆ 4** |
| 15.12.2021 – திருப்பூர் வடக்கு வார்டு ஹச், பிளாக் 192 சர்வே எண்.11 க்குரிய TSLR | இணைய காப்பி | **பி.வா.சா.ஆ 5** |

| | | |
|---|---|---|
| 26.7.2025 – திருப்பூர் வடக்கு, தொட்டிபாளையம் சர்வே எண்.195 க்குரிய புலப்படம் | இணைய காப்பி | **பி.வா.சா.ஆ 6** |
| மின் இணைப்பு ரசீதுகள் | | **பி.வா.சா.ஆ 7** |
| 14.08.2017 – சட்ட கருத்துரை | அசல் | **பி.வா.சா.ஆ 8** |
| 11.10.2025 – சிறப்பு பொது அதிகார ஆவணம் | அசல் | **பி.வா.சா.ஆ 9** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.11.11 18:45:40 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.